

ஈரோடு தெற்கு மாவட்ட கழக இளைஞர் அணி மற்றும் சூர்யா அறக்கட்டளை இணைந்து ஈரோடு கலை அறிவியல் கல்லூரியில் (குரூப் 2/ 2A PRELIMS) TNPSC பயிற்சி வகுப்பு ஈரோடு தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ.திருவாசகம் வரவேற்பில் வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சரும், ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளருமான சு.முத்துசாமி தலைமையில் நடைபெற்றது. பயிற்சியில் 500க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு பயன்பெற்றனர். நிகழ்வில் மாநில, மாவட்ட, மாநகர, பகுதி, ஒன்றிய, பேரூர், கிளை கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள் இளைஞர் அணி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொளி வாயிலாக திறந்து வைத்த திருவாரூர் குடவாசல் அரசு கல்லூரிக்கான புதிய கட்டிடத்தை உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், சட்டமன்ற உறுப்பினர் பூண்டிகே.கலைவாணன் ஆகியோர் திறந்து வைத்தனர். மாவட்ட ஆட்சியர் மோகன சந்திரன் , முன்னாள் எம்.பி. செ.ராமலிங்கம், ஒன்றிய செயலாளர்கள் ஆர்.பாலச்சந்திரன், சேகர் கலியபெருமாள், பேரூர் செயலாளர் பூண்டி.கே.கலைவேந்தன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கல்வியாளர்கள், அரசுத்துறை அதிகாரிகள், பொதுமக்கள் உடன் இருந்தனர்.

## தமிழ்நாட்டின் உயிரியல் பல்வகை பாதுகாப்பு முயற்சிகளை வலுப்படுத்தும் வகையில்

# “சென்னை உயிரியல் பல்வகை குறியீடு” - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்!

**சென்னை, ஆக. 27 -**

**முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (25.8.2025) தலைமைச் செயலகத்தில், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை சார்பில், தமிழ்நாட்டின் உயிரியல் பல்வகை பாதுகாப்பு முயற்சிகளை வலுப்படுத்தும் வகையில் சென்னை மாநகரின் உயிரியல் பல்வகை குறியீட்டை (CITY BIODIVERSITY INDEX CHENNAI ) வெளியிட்டார். சென்னை மாநகரின் உயிரியல் பல்வகையை மதிப்பிடவும், ஒப்பிடவும் படிப்படியாக உருவாக்கப்பட்ட தமிழ்நாட்டின் முதலாவது நகர உயிரியல் பல்வகை குறியீடு இது என்பது குறிப்பிடத்தக்கது.**

நகர உயிரியல் பல்வகை குறியீடு, “சிங்கப்பூர் குறியீடு” எனவும் அழைக்கப்படுகிறது. இது 2008ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு, 9வது உயிரியல் பல்வகை மாநாட்டில் (COP 9) அங்கீகரிக்கப்பட்டது. இந்த குறியீடு உலகளாவிய 23 அளவுகோல்கள் வழியாக நகரங்களின் உயிரியல் பல்வகை பாதுகாப்பை அளவிடவும், மதிப்பிடவும், வலுப்படுத்தவும் உதவுகிறது. உலக நகரங்களை தேசிய மற்றும் சர்வதேச உறுதிமொழிகளோடு ஒழுங்குபடுத்துவதற்கான வழிகாட்டுதலாக “சிங்கப்பூர் குறியீடு” ஒரு முன்னோடி என கருதப்படுகிறது.

இந்த குறியீடு ஒரே நேரத்தில் மதிப்பெண் அட்டவணையாகவும், வழிகாட்டியாகவும் செயல்படுகிறது. நகரங்கள் தங்களின் இயற்கை வளங்களை மதிப்பிட, உயிரியல் பல்வகை மாற்றங்களை கண்காணிக்க, பாதுகாப்பு முன்னுரிமைகளைத் தீர்மானிக்கவும், நகர திட்டமிடலில் சூழலியல் ஆரோக்கியத்தை ஒருங்கிணைக்கவும் இது உதவுகிறது.

சென்னை பெருநகருக்கு, இக்குறியீடு அதிவேக நகர்ப்புற வளர்ச்சியையும், சதுப்பு நிலங்கள், பசுமை விரிப்பு, இயற்கை இனங்களைப் பாதுகாப்பதையும், சமநிலைப்படுத்துவதற்கும் வழிகாட்டுதலாகும். முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்ட இத்தரவு, உயிரியல் பல்வகையை நகர திட்டமிடலில் ஒருங்கிணைக்கும் வழிகாட்டி, பசுமை விரிப்பை விரிவு படுத்தும் திட்டங்கள், கார்பன் சேமிப்பு, வெப்பக் குறைப்பு மற்றும் பொது சுகாதார மேம்பாட்டு ஆகியவற்றில் இவற்றின் பங்களிப்புகள் இடம்பெற்றுள்ளன.

மேலும், பங்கேற்பு அடிப்படையிலான பாதுகாப்பு முயற்சிகள், நிதி ஒதுக்கீடு மற்றும் மறுசீரமைப்பு திட்டங்களுக்கான தரவு சார்ந்த முடிவுகளை எடுக்க உதவுகிறது. இது தமிழ்நாட்டின் “பசுமை தமிழ்நாடு திட்டம்” உள்ளிட்ட பல்வேறு மாநில முயற்சிகளுடன் இணைந்து நகரங்களை நிலையான வளர்ச்சிக்குறியை நோக்கி நகர்த்துகிறது. 2024ஆம் ஆண்டில், சென்னை 72 புள்ளிகளில் 38 புள்ளிகளை (18 அளவுகோல்களில்) பெற்றது.

**நகரம் சிறப்பாக செயல்பட்ட பகுதிகள்:**

இயற்கை பகுதிகளின் விகிதம் 20.12 % நிலப்பரப்பில் இன்றும் காடுகள், சதுப்பு நிலங்கள், கடற்கரை மற்றும் இயற்கை வளங்களை கொண்டுள்ளது.

சூழலியல் இணைப்பு சதுப்பு நிலங்கள், நதிகள் மற்றும் பசுமை பாதைகள் இணைந்து உயிரியல் பல்வகைக்கு ஆதரவளிக்கின்றன.

பூர்வீக பறவை இனங்கள் நகர்ப்புறத்தில் 90 வகை பறவைகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. சென்னை பெருநகரம் மத்திய ஆசிய பறவைகள் பறக்கும் பாதையில் அமைந்திருப்பதால் முழுப் புள்ளிகள் பெற்றுள்ளது.

நிறுவன ஆதரவு கிண்டி தேசிய பூங்கா, பாம்பு பூங்கா, செம்மொழி பூங்கா, போன்றவை அதிக புள்ளிகளை பெற்றன. சவால்கள் இருந்தாலும், சென்னை தனது பசுமை மற்றும் நீலவளங்களால் வரையறுக்கப் படுகிறது.

கிண்டி தேசிய பூங்கா – இந்தியாவில் சிறியதாயினும் மிக அதிக உயிரிப் பல்வகை கொண்ட தேசிய பூங்காக்களில் ஒன்று.

பள்ளிக்கரணை சதுப்பு நிலம் ராம்சர் தளம். 115 பறவை இனங்கள், 46 மீன் இனங்கள் மற்றும் பல விலங்குகளின் வாழிடம்:

ஐ.ஐ.டி. சென்னை வளாகம் பசுமை காடு, மான் மற்றும் 300க்கும் மேற்பட்ட தாவர இனங்களின் வாழிடம்.

தியோசபிக்கல் சொசைட்டி வளாகம் மற்றும் MCC மைதானம் பசுமை வளமும் பாரம்பரிய மரங்களும். இவை அனைத்தும் நகரின் “சுவாசப்பை” போல செயல்பட்டு, காலநிலை தாங்கும் திறனை, பொது சுகாதாரத்தை, கல்வியை மேம்படுத்து கின்றன.

தமிழ்நாடு அரசு மேற்கொண்ட சதுப்பு நில மீட்பு, பசுமை தமிழ்நாடு திட்டம், காலநிலை மாற்ற திட்டம், கடலோர பாதுகாப்பு திட்டம் போன்ற பல முயற்சிகளின் விளைவாக இந்தக் குறியீடு தயாரிப்பு சாத்தியமாகியுள்ளது.

சென்னை நகர உயிரியல் பல்வகை குறியீடு “ICLEI South Asia”, “சென்னை மாநகராட்சி” மற்றும் பிற அமைப்புகளுடன் இணைந்து உருவாக்கப்பட்டது ஆகும். “ICLEI South Asia” என்பது 100க்கும் மேற்பட்ட உள்ளாட்சி அமைப்புகளை உள்ளடக்கிய சர்வதேச வலையமைப்பாகும். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மேலும் 5 நகரங்களுக்கு உயிரியல் பல்வகை குறியீடு உருவாக்கப்படும் என அறிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், வனம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜ கண்ணப்பன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி சுப்ரியா சாகு, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (வனத்துறை தலைவர்) ஸ்ரீனிவாஸ் ஆர். ரெட்டி, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் தமிழ்நாடு உயிர்ப்பல்வகைமை வாரியத்தின் உறுப்பினர் செயலர் செல்வி மித்தா பானர்ஜி, தெற்காசியா செயல் இயக்குநர் எமனி குமார் இணை இயக்குநர் டாக்டர் மோனலிசா சென் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் நகர்ப்புற உள்ளாட்சிப் பகுதிகளில் 2,430 அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிகள் 3,05,000 மாணவ, மாணவியர்கள் நாள்தோறும் பயன் பெறும் வகையில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் விரிவாக்கத் தொடக்க விழா சென்னை மைலாப்பூரில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களும், பஞ்சாப் மாநில முதலமைச்சர் பகவந்த் மான் அவர்களும் சென்னையில் தொடங்கி வைத்ததை தொடர்ந்து நாகை மாவட்டம் வேளாங்கண்ணி புனித ஆரோக்கிய அன்னை அரசு உதவி பெறும் தொடக்கப்பள்ளியில் நாகை மாவட்ட ஆட்சியர் ப. ஆகாஷ் ,நாகை மாவட்ட கழக செயலாளர், தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவர் என்.கௌதமன், கீழையூர் கிழக்கு ஒன்றிய கழக செயலாளரும், வேளாங்கண்ணி பேரூராட்சி துணைத் தலைவருமான ஆ. தாமஸ்ஆல்வாஎடிசன் வேளாங்கண்ணி பேரூர் செயலாளர் மரியசார்லஸ் மற்றும் பலர் உள்ளனர்.



கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை ஒன்றியத்துக்கு உட்பட்ட. மிட்டபள்ளி, மூன்றம்பட்டி, ஊராட்சிகளுக்கு ‘உங்களுடன் ஸ்டாலின்’ முகாம் மிட்டபள்ளி அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் வட்டார வளர்ச்சி அலுவலர் பாலாஜி, வடக்கு ஒன்றிய செயலாளர் மூன்றாம்பட்டி எஸ்.குமரேசன், மத்திய ஒன்றிய செயலாளர் எக்கூர் செல்வம், தெற்கு ஒன்றிய செயலாளர் ரஜினி செல்வம், மாவட்டத் துணைச் செயலாளர் சந்திரன்,முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் சின்னத்தாய், ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது, இரண்டு ஊராட்சிகளுக்கு உட்பட்ட ஏராளமான பொதுமக்கள் தங்கள் மனுக்களை அளித்தனர் . இதில் மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் காந்தி, மாவட்ட விவசாய தொழிலாளர் நல அணி அமைப்பாளர் சத்யநாராயண மூர்த்தி, மாவட்டப் பொறியாளர் அணி துணை அமைப்பாளர் அசோக், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் பூபாலன் ,ஒன்றிய அவைத் தலைவர் அறிவழகன், ஒன்றிய துணை செயலாளர்கள் ஜெயச்சந்திர பாண்டியன், சென்னையன் செட்டி,முத்து மாணிக்கம், தகவல் தொழில் நுட்ப அணி தொகுதி அமைப்பாளர் பெருமாள் சாமி,வடக்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் மோகன், மத்திய ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ஏழுமலை, வடக்கு ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் திருமலை, ஊராட்சி செயலாளர்கள் மணி,முருகன் மற்றும் பல்வேறு துறையைச் சேர்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்,

## கே.பழனியப்பன் முன்னிலை! கீழ்வேளூர் வடக்கு, கீழ்வேளூர் தெற்கு ஒன்றிய

# தி.மு.க. நிர்வாகிகள், கிளைச் செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள் கூட்டம்!

## ப.கோவிந்தராசன் சிறப்புரை!

*நாகை, ஆக. 27 -*

நாகை மாவட்டம் கீழ்வேளூர் வடக்கு ஒன்றியம், கீழ்வேளூர் தெற்கு ஒன்றிய நிர்வாகிகள், கிளைச் செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள் கூட்டம் கீழ்வேளூர் சண்முகா திருமண மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு கீழ்வேளூர் வடக்கு ஒன்றிய அவைத்தலைவர் தங்க. மனோகரன் தலைமை தாங்கினார்.

கீழ்வேளூர் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் கே.பழனி யப்பன் முன்னிலை வகித்தார். கூட்டத்தின் நோக்கம் குறித்தும், கூட்டத்தில் நிறை வேற்றப்பட உள்ள தீர்மா னங்கள் குறித்து தலைமைச் செயற்குழு உறுப்பினரும், கீழ்வேளூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் ப.கோவிந்தராசன் பேசினார். கூட்டத்தில் மாவட்ட சார்பு அணி துணை அமைப்பாளர்கள் ஜுவானந்தம், ஜவகர், முத்துராதா கிருஷ்ணன், கீழ்வேளூர் வடக்கு, தெற்கு ஒன்றிய நிர்வாகிகள் அ.வேதநாயகம், எஸ்.புருஷோத்மதாஸ், பாரதிமோகன், ஆர்.நடராஜன், சி.வீரமணி, ஷேக்முகமது, வெண்ணிலாபாபு, ரவிக்குமார், ஆர்.கே.கண்ணன், கணேசன், கிரிதரன், மதியழகன், சிவக்குமார், உமா பாலமுரளி மற்றும் சார்பு அணி நிர்வாகிகள், கிளை செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட தீர்மானங்கள்

திராவிட மாடல் அரசை நடத்தி வரும் கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஓரணியில் தமிழ்நாடு திட்டத்தின் மூலம் கீழ்வேளூர் வடக்கு, தெற்கு ஒன்றியத்தில் உள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று உறுப்பினர் சேர்க்கையில் 50 விழுக்காடுக்கு மேல் கழகத்திற்கு உறுப்பினர் சேர்த்து வெற்றியை ஈட்டி தந்த தொகுதி பார்வையாளருக்கும், மாவட்ட கழகத்தால் நியமிக்கப்பட்ட பார்வையாளர்கள், ஒன்றிய நிர்வாகிகள், கிளை செயலாளர்கள், நிர்வாகிகள், தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள், பாக நிலை முகவர்கள், பாக டிஜிட்டல் முகவர்கள், பூத் கமிட்டி உறுப்பினர்களுக்கும், அனைத்து நிலை கழக நிர்வாகிகளுக்கும் கீழ்வேளூர் வடக்கு, தெற்கு ஒன்றிய தி.மு.க. தனது நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறது என்றும்

தேர்தல் ஜனநாயகத்தை சிதைக்கும் வகையில் பீகார் மாநில சிறப்புத் திருத்தத்தினை எதிர்த்து திராவிட முன்னேற்ற கழகம் உள்ளிட்ட இந்தியா கூட்டணி கட்சிகள் அனைத்தும் கடுமையாக எதிர்ப்பினை பதிவு செய்த நிலையிலும், உச்சநீதிமன்றமே தவறு இருந்தால் தலையிடுவோம் என்று எச்சரித்த பிறகும் அம்மாநிலத்தில் 65 லட்சம் வாக்காளர் நீக்கிய ஜனநாயக விரோத நடவடிக்கையின் தேர்தல் ஆணையத்திற்கு கண்டனத்தை தெரிவித்துக் கொள்வது என்றும்,

தலைமைக் கழக வேண்டுகோளுக்கு இணங்க வரும் 2026 சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு வரும் காலங்களில் எவ்வாறு, எந்த முறையில் தேர்தல் பணியாற்றுவது என்பது குறித்து ஆராய்ந்து முடிவெடுக்க கீழ்வேளூர் வடக்கு , தெற்கு ஒன்றியத்தில் கிளைகள் தோறும் கழக நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு முன்னாள் பிரதிநிதிகள், பாக நிலை முகவர்கள் 2, பாக டிஜிட்டல் முகவர்கள், பூத் கமிட்டி உறுப்பினர்களுக்கும், அனைத்து நிலை கழக நிர்வாகிகளுக்கும் அனைவரையும் ஒருங்கிணைத்து கிளை கழக கூட்டத்தை கூட்டிட வேண்டும் என்றும், கூட்ட நடவடிக்கைகளை மினிட் புத்தகங்களில் பதிவு செய்து மினிட் நோட்டை ஒன்றிய கழகத்திடம் ஒப்படைத்திட வேண்டும் என்றும்

2026 சட்ட மன்றத் தேர்தலில் கழகத்தலைவர், தமிழ்நாடு முதமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் 200+மேற்பட்ட தொகுதிகளை வெல்வோம் என்ற இலக்கை எட்டும் வகையில் கீழ்வேளூர் வடக்கு ஒன்றியத்தில் உள்ள அனைத்து கிளைகள் தோறும் தளபதி தலைமையிலான திராவிட மாடல் அரசின் திட்டங்களை எடுத்து கூறியும், பயனாளிகள் பயனடைந்ததையும், வாக்காளர்களிடம் எடுத்து கூறி கீழ்வேளூர் சட்டமன்றத் தொகுதியின் வெற்றிக்கு கீழ்வேளூர் வடக்கு, தெற்கு ஒன்றியத்தில் உள்ள கிளைகள் தோறும் கழகத்தினர், கழக நிர்வாகிகள் வீடு வீடாகச் சென்று திண்ணை பிரச்சார பணியை தொடர்ந்திட வேண்டும் என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.



முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் நகர்ப்புற உள்ளாட்சிப் பகுதிகளில் 2,430 அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிகள் 3,05,000 மாணவ, மாணவியர்கள் நாள்தோறும் பயன் பெறும் வகையில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் விரிவாக்கத் தொடக்க விழா சென்னை மைலாப்பூரில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களும், பஞ்சாப் மாநில முதலமைச்சர் பகவந்த் மான் அவர்களும் சென்னையில் தொடங்கி வைத்ததை தொடர்ந்து மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி தூய ஜான் தொடக்கப்பள்ளியில் மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித்தலைவர் எஸ்.ஸ்ரீகாந்த் மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன், சீர்காழி சட்ட மன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம் ஆகியோர் நகர்ப்புற உள்ளாட்சிப் பகுதிகளுக்கான காலை உணவுத் திட்டத்தை தொடங்கி வைத்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**கற்கோவில் இரா. இராமதாசு**
**ஆகஸ்ட் 27 (2017)**



**இளமை காலம் தொட்டே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு நீடாமங்கலம் பகுதியில் கழகம் வளர பாடுபட்டவர்.**

**நீடாமங்கலம் ஒன்றியக் கழகச் செயலாளராக பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டம் – விலைவாசி எதிர்ப்புப் போராட்டம் – சட்ட எதிர்ப்புப் போராட்டம் – இலங்கை தமிழர் ஆதரவுப் போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**